# குடியுரிமை திருத்தச் சட்டத்தில் அ.தி.மு.க. நடிப்பு!

சி.ஏ.ஏ. சட்டத்தை இருவரும் எதிர்க்கிறார்கள் என்று சொல்கிறீர்கள் அதில் ஒருவர் எதிர்க்கிறார், இன்னொருவர் எதிர்ப்பதைப் போல நடிக்கிறார். அது தான் உண்மையானது. இந்த சி.ஏ.ஏ. என்று சொல்லக் கூடிய, குடியுரிமை திருத்தச் சட்டத்தின் வேர் எங்கே இருக்கின்றது என்பதை விளங்கிக் கொள்கிறது நம்முடைய அரசியல் தெளிவு.

ஆர்.எஸ்.எஸ்ஸின் பிதாமகர் குருஜி கோல் வால்கர் எழுதி இருக்கின்ற புத்தகம் நமது தேசியம் ஒரு வரையறை என்ற புத்தகத்தி னுடைய 5 வது அத்தியாயத்தில் இந்த மண்ணில் ஐரோப்பிய கிறித்துவர்களும், முஸ்லிம்களும் வாழ விரும்பினால் அவர்கள் தங்களுடைய மத நம்பிக்கையை கை விட்டுவிட வேண்டும், அவர்கள் குடியுரிமை இல்லாதவர்களாக இந்த மண்ணில் வாழலாம் என்று எழுதியிருக்கின்றார்.

அதற்கு செயல்வடிவம் கொடுக்கின்ற வேலையைத் தான் ஒன்றியத்தில் இருக்கக் கூடிய பா.ஜ.க. அரசு எடுத்தது. அந்த நடவடிக்கைக்கு அ.தி.மு.க. ஒத்துழைப்பாக இருந்து 11 வாக்குகளைத் தந்ததின் மூலம் நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டம் நிறைவேறியது.

கோவைக் கலவரத்தைப் பற்றி எல்லாம் இங்கே பேசினார்களே அதில் பறிபோன உயிர்களை விட இந்தியா முழுவதும் பறிபோன உயிர்கள் டெல்லியில் நீதிமன்றத்தில் நீதிபதி ஸ்ரீதர் அவர்கள் படத்தை ஓட்டிக் காட்டினாரே கோலிமாரோ சால்க்கோ என்று சொல்லிக்கொண்டு துப்பாக்கி யால் சுட்டுக் கொள்வோம் என்று சாகிம் பாகித் மீது தாக்குதல் நடத்தினார்களே அவையெல்லாம் எப்போது நடந்தது? இந்த மத வெறி திட்டத்தை அரசியல் சாசனத்திற்கு முரணான ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அப்போது தி.மு.கழகம் என்ன செய்தது? கடுமையாக எதிர்த்தது, இங்கே ஜவகர் அலி இப்படிஎல்லாம் பொய் பேசுவதற்கு பொய் சொல்வதற்கு ஒரு தனிப்பட்ட மன உறுதி வேண்டும். அது எனக்கு இல்லாததற்காக வருந்துகிறேன். பொதுசிவில் சட்டத்தை தி.மு.க. ஆதரித்தது என்று எப்படி சொன்னார். எங்கே அவர்கள் ஆதரித்தார்கள், எப்போது ஆதரித்தார்கள்

அங்கே அ.தி.மு.க. பொது சிவில் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தோம் என்று சொன்னார்கள். சி.ஏ.பி. ஆக அது அமன் மெண்ட் பில்லாக இருந்தபோதே, தி.மு.கழகமும், தமிழகத்தினுடைய பா.ஜ.க. அல்லாத, அ.தி.மு.க. அல்லாத கட்சிகள் எதிர்த்தன.

இன்றைக்கு அ.தி.மு.க.வின் நிலை எப்படி இருக்கிறது? நான் கூட பல கூட்டங்களில் கேட்டேன், என்.பி.ஆர்.இருந்திருந்தால் எம்.ஜி. ஆர். வந்திருப்பாரா, இந்தியாவிலே பிறக்காதவர்கள், இந்திய குடியுரிமை பெற முடியாது என்று சொன்னால், அவர் கண்டியில் பிறந்தவர் அல்லவா, இந்தக் கேள்விக்கு அ.தி.மு.க. வால் பதில் சொல்ல முடியவில்லை.

இதில் அ.தி.மு.க. கண்டிப்பாக நடித்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், 543 இடங்கள் மக்களவையில் இருக்கின்றது. அ.தி.மு.க. குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து நடத்திய போராட்டங்கள் எத்தனை, உச்சநீதி



முனைவர் ஜெ.ஹாஜா கனி
(புதிய தலைமுறை
தொலைக்காட்சி ‘நேர்படப் பேசு’)

மன்றத்தில் வழக்குப் போட்டார்களா, மோடி அரசைக் கண்டித்தார்களா, போராடியவர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்காமல் இருந்தார்களா, வழக்கு பதிவு செய்யாமல் இருந்தார்களா, கல்லூரி மாணவர்கள் மீதெல்லாம் வழக்குப் போட்டார்களே, அவர்களுடைய எதிர்க்காலத்தை சீரழிக்கப் பார்த்தார்களே,

ஏன், சட்டமன்றத்தில் அன்றைக்கு வண்ணாரப்பேட்டையில் போராட்டம் நடத்திய போது நாங்கள் காவல்துறை பாதுகாப்பு கொடுத்து தண்ணீர் எல்லாம் கொடுத்ததாக இங்கே ஜவகர் அலி கூறினார், இதனை அரிச்சந்திரன் கேட்டிருந்தால் அவரே செத்து போய் இருப்பார்.

வண்ணாரப்பேட்டையில் என்ன நடந்தது என்று அனைவருக்கும் தெரியும். உலகத்திற்கே தெரியும். இந்திய நாடு ஜனநாயக நாடு, வெள்ளைக்காரனைக் கூட எதிர்த்து போராட்டம் நடந்திருக்கிறது. அதற்காக வெள்ளைக்காரன் போராட்டத்தை ஆதரித்தான் என்று பொருளா? அ.தி.மு.க. அரசு அதனை எப்படி கையாண்டது என்பது வரலாற்றில் பதிவாகி இருக்கின்றது.

சி.ஏ.ஏ. விவகாரத்தில் தி.மு.க. உச்சநீதி மன்றத்தில் வழக்குப் போட்டது. அ.தி.மு.க. போட்டதா, இரண்டரை இலட்சம் பேரை திரட்டி சென்னையில் மாபெரும் பேரணியை தி.மு.க.வின் தலைவர் இன்றைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நடத்திக் காட்டினாரே, அப்போது ஆட்சியில் இருந்த பழனிச்சாமி என்ன செய்தார்.?

சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்களா, திராவிட முன்னேற்றக் கழகம் தான் ஆட்சிக்கு வந்து தீர்மானம் நிறைவேற்றியது, அதற்கு ஆதரவு தெரிவித்தார்களா, இப்படி பல மாநிலங்கள், பஞ்சாப்பில் நிறைவேற்றப்பட்டது. ஏன் பச்சோந்தியைக் கூட வெட்கப்பட வைக்கும் அளவிற்கு கட்சித் தாவல் செய்துகொண்டிருக்கின்ற நிதிஷ்குமார் கூட பா.ஜ.க. கூட்டணியில் இருந்து கொண்டே நான் சி.ஏ.ஏ.வை அமல் படுத்த மாட்டேன் என்று சொன்னாரே, தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த அ.தி.மு.க.விடமிருந்து ஒரு குரல் கேட்டதா, இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் குடியரசுத் தலைவராக இருந்த பக்ருதீன் அலி அகமது அவர்களின் குடும்பம் என்.ஆர்.சி.யில் இருந்து நீக்க ப்பட்டது, கார்கில் போரிலே மிகப்பெரிய சாதனைகள் நிகழ்த்தி ஜனாதிபதி பதக்கத்தை வாங்கியிருந்த சனாவுல்லா அவர்களுடைய பெயர் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் இல்லை. அதே போல் அசாமில் முதல்வராக இருந்த அன்வாரா தைமூர் அவர்களுடைய பெயர் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தினால் நீக்கப் பட்டது.

(இந்நேரத்தில் ஜார்க்கண்ட் முதலமைச்சர் கைது சம்பந்தமாக செய்தி வெளியானது இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையா என்ற கேள்வி எழுந்ததற்கு பதில்)

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அமலாக்கத் துறை செயல்படுமா செயல்படாதா என்கின்ற மில்லியன் டாலர் கேள்விக்கு விடை இல்லை. இங்கே மறுபடியும் சி.ஏ.ஏ.க்குள் திரும்பினார்கள். அரசியல் நிர்வாகம் என்பது ராஜ தர்மத்தை கடைபிடிக்க வேண்டும் என்று இன்றைய பிரதமராக இருக்கின்ற நரேந்திர மோடி அவர்களைப் பார்த்து அன்றைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் சொன்னார்கள். குஜராத் படுகொலைகளை பார்த்துவிட்டு ராஜதர்மத்தை கடைபிடிக்க வேண்டும் என்று. அது என்னவென்றால் எல்லோருக்கும் பொதுவாக இருப்பது தான்.

இன்றைக்கு பள்ளி வாசல்களாக இருந்தால் இடி. எதிர்க்கட்சியாக இருந்தால் ஈடிஇது தான் இவர்களுடைய ஒரே செயல்திட்டம். இப்போது நான் திருப்பிக் கேட்கிறேன் தமிழ்நாட்டில் அங்கித் திவாரி என்ற ஒருவர் சுரேஷ் பாபு என்ற அரசு ஊழியரிடம் இருபது இலட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கினார் என்று சொல்லி இந்த ஈ.டி. அதிகாரி கைது செய்யப் பட்டார்.

அந்த வழக்கை இங்கே கூட நடத்தக் கூடாது என்று சொல்லி, உச்சநீதிமன்றத்திற்கு கூப்பிடுகி றார்களாம். அப்போது தவறு செய்யாதவர்கள் முதல் கல்லை எறியுங்கள் என்று ஏசு நாதர் சொன்னார் என்று சொல்வார்களே அதைப்போல.

சேலத்தில் கண்ணன், கிருஷ்ணன் என்ற இரண்டு விவசாயிகள், அவர்களுடைய நிலத்தைக் கேட்டு பா.ஜ.க.வைச் சேர்ந்த குணசேகரன் என்பவர் மிரட்டிக் கொண்டு இருக்கிறார். உடனே அவர்களுக்கு ஈடி சம்மன் அனுப்பியது. இந்த இலட்சணத்தில் தான் இருக்கிறது அமலாக்கத்துறை!

விசுவாசம் என்றால் என்ன என்று இங்கே கேட்டார்களே, நான் சொல்கிறேன், குடியுரிமைத் திருத்தச் சட்டம் கொண்டு வந்தபோது அமைதி காத்ததே அ.தி.மு.க. அதற்குப் பெயர் தான் விசுவாசம்!

### செட்டியபட்டி ஊராட்சி வேளாங்கண்ணிபுரத்தில்

# பூமிதான நிலத்தில் 40 வருடங்களாக குடியிருந்தவர்களுக்கு பட்டா!

## அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கி வாழ்த்தினார்!

திண்டுக்கல், பிப். 3 - செட்டியபட்டி ஊராட்சி வேளாங்கண்ணி புரத்தில் பூமிதான நிலத்தில் இடம்பெற்று 40 வருடங்களாக பட்டா இல்லாமல் குடியிருந்த வர்களுக்கு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பட்டா வழங்கி வாழ்த்தினார். 40 வருடங்களாக பட்டா இல்லாமல் வாழ்ந்தவர்களுக்கு பட்டா கொடுத்ததால் குடியிருப்பு வாசிகள் கண்ணீர் மல்க ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு நன்றி தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் செட்டியபட்டி ஊராட்சிக்குட்பட்ட சிறுமலை அடிவார கிராமமான வேளாங்கண்ணி புரத்தில் தமிழ்நாடு பூமிதான வாரியம் மூலம் 33 பேருக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்த இடத்தில் வீடு கட்ட முடியாமல் தவித்து வந்தனர். கடந்த 12 வருடங்களுக்கு முன்பு வருவாய் துறை அமைச்சராக இருந்த ஐ.பெரியசாமி அவர்களிடம் பட்டா கேட்டு கோரிக்கை மனு கொடுத்தனர். அவரும் உடனடியாக பூமிதான வாரியத்திற்கு அனுப்பி வைத்தார். அ.தி.மு.க. ஆட்சியில் 10 வருடங்களாக அவர்களுக்கு எவ்வித அனுமதி வழங்காமல் காலம் தாழ்த்தி வந்தனர். திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் மீண்டும் அதற்கான முயற்சியை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எடுத்ததன் பேரில் அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கான ஏற்பாடு நடைபெற்றது.

மேலும் வேளாங்கண்ணி புரத்தை சேர்ந்த கிராம மக்களுக்கு ரேஷன் பொருட்களை விநியோகம் செய்யும் கடையும் பாது காப்பின்றி இருந்தது. ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவின் பேரில் பகுதி நேர நியாய விலை கடைக்கு புதிய கட்டிடம் கட்டிக்கொடுக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது.

ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி புதிய நியாய விலை கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். அதன்பின்னர் வேளாங்கண்ணி புரத்தில் நடைபெற்ற பட்டா வழங்கும் நிகழ்ச்சி;க்கு ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை தாங்கினார். திண்டுக்கல் எம்.பி. ப. வேலுச்சாமி, ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் டி.ராஜா வரவேற்று பேசினார். விழாவில் கலந்து கொண்டு 33 குடும்பங்களுக்கு பட்டா வழங்கி அவர்களை வாழ்த்தி பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பூமிதான வாரியத்தில் இருந்து பெற்ற இடங்களுக்கு பட்டா வழங்குவதில் பல்வேறு சிரமங்கள் இருந்தன. அவற்றை எல்லாம் சரி செய்து இன்று உங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் நீங்கள் விரைவில் கலைஞர் அவர்களின் வீடு வழங்கும் திட்டம் மூலம் வீடுகள் கட்ட தயாராக உள்ளது.

இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு, இந்த மூன்றையும் அடித்தட்டு மக்களுக்கு வழங்கி வருவது முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் நல்லாட்சி செய்து வரும் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்றார். செட்டியபட்டியில் இருந்து வேளாங்கண்ணிபுரத்திற்கு வரும்போது சாலைகள் சேதமடைந்து இருப்பதை பார்த்தேன். விரைவில் அவர்களுக்கு முதலமைச்சரின் கிரா மப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் சிறப்பான சாலை அமைய உள்ளது. இது தவிர இப்பகுதியை சேர்ந்த பொதுமக்களில் ஒரு சிலருக்கு முதியோர் உதவித்தொகை விடு பட்டுள்ளது என மனு கொடுத்துள்ளார்கள். விரைவில் அவர்களுக்கும் வீடு தேடி முதியோர் உதவித்தொகை வரும் என்றார்.

திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் பெண்களுக்கு வழங்கப்பட்ட மகளிர் உதவித் தொகை கிராமப்புற பெண்களின் வாழ்வாதரத்திற்கு உறுதுணையாகஉள்ளது. இதுபோல கல்லூரி மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை அவர்களின் மேற்படிப்பிற்கு பக்கபலமாக உள்ளது.

இதன்மூலம் பெண்கள் உயர்கல்வி கற்கும் நிலை அதிகரித்துள்ளது என்றார். இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தேசிய நான்குவழிச்;சாலையில் உள்ள தடுப்பை அகற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

விரைவில் அந்த தடுப்பை அகற்றிபொதுமக்கள் சிரமமின்றி செல்லநடவடிக்கை எடுக்கப்படும் ஊராட்சி மன்றதலைவர் டி.ராஜா இளைஞராக இருந்தாலும் மக்கள் நலனுக்கான பணியில் அக்கறையோடு செயல்படுகிறார். அவருக்கு எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். நிகழ்ச்சியில் ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன், பறக்கும்படை தாசில்தார் ரிஸ்வான், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக தாசில்தார் நவநீத கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லாரன்ஸ், தட்சிணா மூர்த்தி, அலுவலகமேலாளர் முருகன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம் பட்டி விவேகானந்தன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால்,

ஒன்றிய தி.மு.க. துணை செயலாளர்கள் ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், வசந்தா கென்னடி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைபட்டி வாஞ்சிநாதன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலிக்கம் பட்டி புவனேஸ்வரி அருளரசன், காந்திகிராமம் ஜெயராமன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் நாகவள்ளி, காணிக்கைசாமி, செட்டியபட்டி ஊராட்சியை சேர்ந்த கோமாளிசாமி, மற்றும் செட்டியபட்டி ஊராட்சி மன்ற துணை தலைவர் பழனி, ஊராட்சி செயலாளர் வேல்முருகன்,

வார்டு உறுப்பினர்கள் ஜான்சி பொன்மலர், பொம்முத்தாய், நந்தினி, ரவி, ராஜேந்திரன், மாரியம்மாள், மற்றும் வருவாய் ஆய்வாளர் ஜான்பிரிட்டோ, கிராம நிர்வாக அலுவலர் சாகிராபாணு, வேளாங்கண்ணிபுரம் பொது மக்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ஊராட்சி மன்ற கட்டிட திறப்பு விழாவிற்கு வந்த உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஊர் பொதுமக்கள்; ஆராத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. காஜாமொய்தீன்
### பிப்ரவரி 3 (2018)



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணி பகுதி பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்து, மாநில சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## இயக்கத்தின் மூலமே! ஆணிவேர் ஆலமே! எங்கள் அண்ணா!...



அலைதவழ் ஆழி முத்தே!
அழகுவான் கதிரே! ஓங்கு
மலைதவழ் அருவி ஊற்றே!
மணக்கின்ற முல்லைக் காடே!
கலைதவழ் திருவே! காஞ்சி
கருதந்த தமிழ்க்கற் கண்டே!
சிலைதவழ் பொலிவின் வண்ணம்
சிறக்கின்ற எங்கள் கோவே!

தித்திக்கும் தேனே! எங்கள்
திராவிடத் திருவி ளக்கே!
எந்தக்கத்திக்கும் புகழ்ம ணக்கும்
இனிப்புறு தமிழே!
எந்திக்கும் அறுப டாத
கார்முகில் நிலவே! கொண்ட
உத்திக்கும் எழுத்தால் பேச்சால்
உயரத்தின் இமயம் நீயே!

உருவத்தில் குள்ளம்! ஆனால்
உள்ளத்தால் ஆழி வெள்ளம்!
திருக்குறள் முழங்கு வாயில்
தீந்தமிழ் துள்ளும்! பாகாய்
உருகிடு நடையால் நெஞ்சை
உவமைகள் அள்ளும்! தாய்மை
வருடிடும் விரல்கை போன்றே
வார்த்தைகள் அறிவில் வெல்லும்!

ஊனத்தால் செவிடு, நொண்டி,
ஊன்பேடு, குருடு, கூனல்,
ஈனத்தால் நொந்தார்! என்றன்
இனத்தாரோ கிடந்தார் வீழ்ந்தே!
வானத்தால் வறட்சி நீங்கி
வையகம் தழைத்தல் போன்றே
மானத்தால் தமிழ ரானார்!
மீட்பரே அண்ணா உன்னால்!

மொழிப்போரில் களங்கள் கண்டு
மூத்தவர் பெரியார் தம்மை
விழிபோலப் பார்வை கொண்டாய்!
விதையென மண்ணில் வீழ்ந்தாய்!
வழிதோன்று மாந்தர் யார்க்கும்
விரிநிழல் ‘தரு’போல் நின்றாய்!
குழிவீழ்ந்த தமிழர் கையில்
கோல் தந்தே தூக்கி விட்டாய்!

வடவரின் ஆதிக் கத்தை
வீழ்த்தினாய்! வீரங் காட்டி
இடக்கரை வால்ந றுக்கி
இந்திக்கு முடிவு கண்டாய்!
மடக்கினாய் நுனிநின் நாவின்
மடைவெள்ள ஆங்கி லத்தால்!
குடத்திடை இருந்த நாட்டைக்
குன்றேற்றி வைத்தாய் அண்ணா!

தண்டமிழ் மண்ம ணக்கத்
தமிழ்நாடு பெயரைச் சூட்டித்
திண்டோளார் குதிக்க வைத்தாய்!
சீர்திருத் தமணம் காதல்
கொண்டார்க்குச் சட்டம் செய்தே
கொள்கையில் பெரியார் நிற்க
உண்டாக்கி வைத்தாய்! தொண்டு
உலகெல்லாம் பரவச் செய்தாய்!

விலையற்ற மாணிக் கம்நீ!
விடியல்நீ! உயர்வை எண்ணி
உலகத்த மிழ்மா நாட்டால்
ஓங்குற்றுப் புகழ்ப டைத்தாய்!
நிலத்திடைக் கொள்கை காக்க
நீகண்ட தங்கத் தம்பி
கலைஞரின் தோள்கள் காய்க்க
கழகத்தைச் சுமக்க விட்டாய்!

நீவிட்ட பணிதொ டர்ந்து
நீணிலம் பொன்னாய் மாற
ஏவினார் மறவர் கூட்ட
இயக்கத்தை நடத்தும் மூச்சால்
கூவிற்றார் ஆரி யத்தைக்
குழிதோண்டிப் புதைப்ப தற்கே!
ஆவிதம் உடலி ருக்க
அண்ணன்த ளபதி வெல்வார்!

இற்றுவாழ் மொழிக்கு லத்தில்
இந்தியால் தமிழ்மொ ழிக்குப்
புற்றுநோய் படரா வண்ணம்
பூவிழி இமையால் காத்தாய்!
புற்றுநோய் உன்னைப் பற்றப்
புதைகுழி உறக்கம் கொண்டாய்!
வற்றாத கங்கைக் கண்ணீர்
வீழ்ச்சியில் தோற்றோம் அண்ணா!

கவிஞர்
**தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

